**பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (முகுனு)**

**குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு**

**மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

(Merchant Bank of Sri Lanka & Finance PLC)

## 1. பொருட்கள் / சேவைகள் - குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு

## 2. பிரதான அம்சங்கள் மற்றும் நன்மைகள்

அ) சிக்கல்களற்ற விதத்தில் நிதிக் குத்தகை வசதிகள்.

ஆ) தனிப்பட்ட வாடிக்கையாளர் சேவை.

இ) வாடிக்கையாளரது மீளச் செலுத்தும் இயலுமைக்கு மற்றும் நிதிப்பாய்ச்சலுக்கு மிகவும் பொருத்தமான விதத்தில் தயாரிக்கப்படக்கூடிய நெகிழ்வான மீளச் செலுத்தும் முறை.

ஈ) கவர்ச்சிகரமான வட்டி வீதம்.

உ) ஆகக்குறைந்த ஆவண நடவடிக்கைகள்.

ஊ) ஒன்லைன் மதிப்பீட்டு சேவைகள் (மதிப்பீட்டு நடவடிக்கைகள் கம்பனியினால் மேற்கொள்ளப்படும்.)

எ) வாடிக்கையாளரது வீட்டிற்கு வந்து வழங்கப்படும் சேவை

## 3. தகைமை:

**வாடிக்கையாளர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

அ) 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 65 வயதிற்குக் குறைந்த இலங்கைப் பிரஜையாக இருத்தல்.

ஆ) ஏற்றுக் கொள்ளக்கூடிய / உறுதிப்படுத்தக்கூடிய மீளச் செலுத்தும் இயலுமை.

இ) தெளிவான கடந்தகால அறிக்கையொன்று இருத்தல் வேண்டும். (திருப்திகரமான கொடுகடன் தகவல் பணியக அறிக்கை)

ஈ) நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கமானது சட்டரீதியானதாக இருத்தல் வேண்டும்.

## 4. வட்டி வீதம் மற்றும் ஏனைய கட்டணங்கள்

### 4.1 வட்டி வீதம்

வட்டி வீதம், சொத்துக்களது தரம், வாடிக்கையாளர் அச்சம் தொடர்பான பகுப்பாய்வு மற்றும் சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு காலத்திற்குக் காலம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவினால் (ALCO) எடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் அடிப்படையில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகின்றது. மேலும், வருடாந்த வட்டி வீதம் 16.00% ஆகும்.

## 4.2 ஏனைய கட்டணங்கள்

### 4.2.1 ஆவணப்படுத்தும் கட்டணம் - சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி உரித்தாகும்.

| | |
|---|---|
| < இல.ரூ. 500,000 | இல.ரூ 5,000.00 |
| இல.ரூ500,000 - இல.ரூ. 999,999 | இல.ரூ 10,000.00 |
| இல.ரூ1,000,000 - இல.ரூ. 1,999,999 | இல.ரூ. 12,000.00 |
| இல.ரூ2,000,000 - இல.ரூ2,999,999 | இல.ரூ. 14,000.00 |
| இல.ரூ3,000,000 - இல.ரூ. 4,999,999 | இல.ரூ. 17,500.00 |
| இல.ரூ. 5,000,000 - இல.ரூ. 9,999,999 | இல.ரூ 20,000.00 |
| **>இல.ரூ10,000,000** | **ஆகக்குறைந்தது இல.ரூ. 25,000.00** |
| **முச்சக்கரவண்டி** | **7,500** |
| **துவிச்சக்கரவண்டி** | **5,000** |

### 4.2.2. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் (DMT/RMV) பதிவு செய்யும் கட்டணங்கள்

அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகன பதிவுக் கட்டணங்கள் உரித்தாகும்.

### 4.2.3 மாதாந்த தவணைப்பணத்தைச் செலுத்தாமை அல்லது தாமதமாகச் செலுத்துதல் தொடர்பில் அறவிடப்படுகின்ற தண்ட வட்டி (இருந்தால்)

உரிய தினத்தில் தவணைப்பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில், தாமதமாகும் காலத்திற்கு ஒரு மாதத்திற்கு **மூன்று வீத (3%)** மேலதிக வட்டி (Overdue interest) அறவிடப்படும்.

### 4.2.4 சேவைகளை முன்னதாகவே தீர்த்தல்:

குத்தகைதாரர் / வாடகைக் கொள்வனவாளரால் (Hirer) உரிய காலத்திற்கு முன்னர் கடன் வசதிகளை தீர்க்கும் சந்தர்ப்பத்தில், அதன் மீதி வட்டிக்கு, சலுகையொன்றை வழங்கும் செயற்பாடானது MBSLஇன் முழுமையான விருப்புடன் மேற்கொள்ளப்படும்.

### 4.2.5 பொருந்தக்கூடிய ஏனைய கட்டணங்கள்

| இலக்கம் | அறவீடுகள் / கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் | அறவீடுகள் / கட்டணம் (இல.ரூபா) |
|---|---|---|
| 1 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் | 1,000.00 |
| 2 | உறுதி மற்றும் திட்ட வரைபடங்களது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் | 750.00 |
| 3 | நிலுவைகள் இல்லையென்பதற்கான கடிதம் | 250.00 |
| 4 | வாடிக்கையாளரது மீளச் செலுத்தும் வரலாறு | 250.00 |
| 5 | இரண்டாவது பிரதியை அழித்துவிடும் கடிதம் - அனைத்து வாகன வகுப்புக்களுக்கும். | 2,000.00 |
| 6 | ஆட்சேபனை இல்லை என்பதற்கான கடிதம் | 1,000.00 |
| 7 | கடன் தீர்ப்பனவு கடிதங்கள். | 750.00 |
| 8 | கடன் கொடுப்பவர் கொள்வனவாளருக்கு வழங்குகின்ற வழங்குகின்ற சிட்டை. | 1,500.00 |
| 9 | காசோலை திருப்பி அனுப்பும் கட்டணம். | 2,500.00 |
| 10 | காசோலை மீளத் திருப்பம் - கட்டளை பிறப்பித்தவர் கொடுப்பனவை நிறுத்துதல். | 5,000.00 |
| 11 | விடுவிக்கும் உறுதி (தொலைந்த) தயாரித்தல் மற்றும் கையொப்பம் இடுவதற்கான சட்டக் கட்டணம். | 7,500.00 |

## 5. <u>பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள்</u>

- அனைத்து வாடிக்கையாளர்களையும் அருகிலுள்ள கிளைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுப்பதோடு தங்களது தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடவும் அன்புடன் வரவேற்கின்றோம்.

- கலந்துரையாடலின் பின்னர், உரிய விடயங்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், வாடிக்கையாளரது தேவைக்கேற்ப உரிய நடைமுறைகள் ஆரம்பிக்கப்படும்.

### 5.1. தேவைப்படும் ஆவணங்கள்

#### 5.1.1. தனிநபர் விண்ணப்பதாரி

i. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்

ii. சான்றுப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதி மற்றும் விலாசத்தை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான உறுதிப்படுத்தும் ஆவணம் (06 மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட சிட்டை)

iii. வழங்குனரின் சிட்டை / விலைமனுக்களைக் கோரல் / புரோபோமா சிட்டை (Proforma Invoice) / விற்பனைக் கடிதம்

iv. பிணையாக வைக்கும் பொருளுக்கு (வாகனம் / இயந்திரங்கள்) LASL (இலங்கை மதிப்பீட்டாளர்களின் சங்கம்) அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை மற்றும் வாகனங்களுக்கு MTA உரிமை மாற்றம் செய்யும் படிவங்களுடன் பதிவுச் சான்றிதழ் (CR புத்தகம்)

v. வருமான கூற்று (சம்பளத்தை உறுதிப்படுத்தும் கடிதம் / அண்மையில் எடுக்கப்பட்ட சம்பளப் பட்டியல் / வங்கிக் கணக்குக் கூற்று)

vi. கொடுகடன் தகவல் பணியக அறிக்கை (தனிப்பட்ட மற்றும் வர்த்தக)

vii. காசுப்பாய்ச்சல் கூற்று

viii. பிற வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

#### 5.1.2. நிறுவன வாடிக்கையாளர்கள் - வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் / பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள்

அ. நிறுவனம் தாபிக்கப்பட்ட சான்றிதழ்

ஆ. நிறுவனத்தின் யாப்பு

இ. 1ஆம் படிவம், புதிய 13ஆம் படிவம், 15ஆம் படிவம் மற்றும் 20ஆம் படிவங்களது பிரதிகள்

ஈ. வரி செலுத்தியமைக்கான சிட்டை / வருமான வரி (புதிய)

உ. பணிப்பாளர் சபை பிரேரணை

ஊ. கடந்த மூன்று வருடங்கள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கை

எ. நடப்பு ஆண்டின் முகாமைத்துவ கணக்கு / நிதிப்பாய்ச்சல் கூற்று

ஏ. கடந்த 6 மாதத்தின் வங்கிக் கூற்று

ஐ.கொடுகடன் தகவல் பணியன அறிக்கை (வர்த்தகம் / பணிப்பாளர்களது)

ஒ. தேவையான பிற ஆவணங்கள்

### 5.1.3. தேவையான ஆவணங்கள் (பிணையாளர்கள்)

i. பிணையாளரின் விண்ணப்பப்படிவம்

ii. சான்றுப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அடடையின் பிரதி

iii. வருமானக் கூற்று (சம்பளத்தை உறுதிப்படுத்தும் கடிதம் / அண்மையில் எடுக்கப்பட்ட சம்பளப் பட்டியல் / வங்கிக் கணக்குக் கூற்று)

iv. கொடுகடன் தகவல் பணியக அறிக்கை (தனிப்பட்ட மற்றும் வர்த்தகம் இருந்தால் )

v. விலாசத்தை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான உறுதிப்படுத்தும் ஆவணம் (06 மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட சிட்டை)

vi. காசுப்பாய்ச்சல் கூற்று

vii. பிற வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

## 6. பொதுவான தேவைப்பாடுகள்

- பெயர்ப்பலகை தெளிவாக தெரியும் விதத்தில் வர்த்தக நிலையத்தின் புகைப்படம்
- நிலைமை / இடத்தினைப் பரிசோதித்த அறிக்கை
- கடன் தொகை தேவைப்படும் காரணத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்.
- மேலதிக திறப்பு
- பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை

## 7. பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

அ) உரிய சொத்துக்கள் – பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்கள் / இயந்திர உபகரணங்கள்

ஆ) காலாவதிக்கு முன் தீர்வு செய்தல் – வாடிக்கையாளரின் தேவைக்கிணங்க, தண்ட வட்டிக்கு உட்பட்டு கடனை காலாவதிக்கு முன் முழுமையாகத் தீர்வு செய்யும் வசதி வழங்கப்படும். தண்ட வட்டியில் கழிவு அல்லது விலக்கு வழங்கப்படுமா என்பது MBSL முகாமைத்துவத்தின் முழு விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

இ) சொத்து வெளிப்பாடு – இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு அமைய அமுல்படுத்தப்படும். (கடன் – மதிப்பு விகிதம் / LTV)

ஈ) கால எல்லை – அதிகபட்சம் 05 ஆண்டுகள். (புதிய / பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு 06 ஆண்டுகள் வரை கால அவகாசம் வழங்கப்படும்.)

உ) வெளியக மதிப்பீடுகள், உள்நாட்டு மதிப்பீட்டு அதிகாரியால் மீள மதிப்பீடு செய்யப்படும்.

ஊ) மீளச் செலுத்தும் முறை – வாடிக்கையாளர் தேர்வு செய்யும் சேவை வகையை அடிப்படையாகக் கொண்டு மீளச் செலுத்தும் முறை தீர்மானிக்கப்படும். (உதா: மாதாந்த தவணைகள், கட்டமைக்கப்பட்ட செலுத்தல்கள், பருவகால செலுத்தல்கள்)

எ) ஒப்பந்த முடித்தல் மற்றும் மீளக் கைப்பற்றல் – சட்ட நடைமுறை

குத்தகை பெறுநர், குத்தகை ஒப்பந்தத்தின் முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்றத் தவறி, ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க மீறலை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களில், குத்தகை வழங்குநருக்கு 23 ஆம் பிரிவின் விதிகளுக்கு உட்பட்டு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை உண்டு:

அ. குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகைகளை உடனடியாக (ஒரே தடவையில்) செலுத்துமாறு குத்தகை பெறுநரிடம் கோருதல்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்ட (அ) பிரிவின் கீழ் கோரப்பட்ட உடனடி செலுத்தல்களை குத்தகை பெறுநர் செய்யத் தவறினால், குத்தகை ஒப்பந்தத்தை முடிவுறுத்துதல்.

**மற்றும்**

(i) வழங்கப்பட்ட உபகரணங்களின் உடைமையையோ அல்லது அதன் பெறுமதியையோ மீளக் கைப்பற்றுதல்.

(ii) குத்தகை பெறுநர் ஏற்கனவே செலுத்திய குத்தகைத் தொகையை கழித்துக் கொண்டு, ஏனைய அனைத்து செலவுகள் மற்றும் கட்டணங்களுடனும், இக்குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய மொத்த குத்தகைத் தொகையையும் உடனடியாகக் கோரி மீட்டெடுத்தல்.

(iii) குத்தகை பெறுநருக்கு முன் அறிவித்தல் இன்றி, மேற்கண்ட சொத்துக்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்தையோ பொது ஏலம், தனிப்பட்ட ஒப்பந்தம் (தனியார் விற்பனை ஒப்பந்தம்) அல்லது விளம்பர அறிவிப்புகள் மூலம் விற்பனை செய்தல் அல்லது குத்தகை வழங்குநரின் விருப்பத்தின்படி அவற்றை வைத்திருத்தல், பயன்படுத்துதல், இயக்குதல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு விதமாக அகற்றுதல் அல்லது அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(iv) இலாப இழப்புகள் உட்பட ஏற்பட்ட அனைத்து நேரடி மற்றும் துணை இழப்புகளுக்கும் குத்தகை பெறுநரிடமிருந்து இழப்பீடு பெறுதல். குறிப்பாக, இக்குத்தகை ஒப்பந்த மீறலினால், இவ்வொப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய குத்தகைக்கு இணையான தொகையில் மீண்டும் குத்தகைக்கு வழங்க முடியாததன் மூலம் குத்தகை வழங்குநருக்கு ஏற்படும் இலாப இழப்பு அல்லது நட்டத்திற்கான இழப்பீடு பெறுதல்.

(v) சட்டத்தின் கீழ் குத்தகை வழங்குநருக்கு கிடைக்கும் ஏனைய உரிமைகள் அல்லது நிவாரணங்களை நடைமுறைப்படுத்துதல்.

(vi) மேலே குறிப்பிடப்பட்ட எந்த விடயத்திற்கும் முரணானதாக ஏதேனும் இருந்தபோதிலும், குத்தகை வழங்குநரின் எழுத்துமூல முன் அனுமதியின்றி, குத்தகை பெறுநர் குறித்த வாகனம் / உபகரணத்தை மூன்றாம் தரப்பினருக்கு மாற்றுதல் மற்றும் / அல்லது அடமானம் வைப்பது அல்லது விற்பனை செய்தல் மற்றும் / அல்லது குத்தகை வழங்குநரின் சட்டபூர்வ உரிமைகள் மற்றும் உரிமைத்தகுதிகளை பாதிக்கும் அல்லது மீறும் வகையில் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில், இக்குத்தகை ஒப்பந்தத்தை முடிவுறுத்த குத்தகை வழங்குநருக்கு முழுமையான உரிமை உண்டு.

**7.1. பொருந்தக்கூடிய சட்ட ஏற்பாடுகள்**

i. நிலைமைகளின் அடிப்படையில் அமைந்த, 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க குத்தகை நிதிச் சட்டத்தின் கீழ் உள்ள கீழே காட்டப்பட்டுள்ள கட்டளைகளும் உட்படுத்தப்படும்.

ii. 1982ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம்
iii. ஒப்பந்த சட்டங்கள்
iv. இலங்கை சிவில் மற்றும் குற்றவியல் சட்டம்

**8. முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகள்**

எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை கிழே காட்டப்பட்டுள்ள எந்தவொரு முறைமையின் ஊடாகவும் முன்வைக்கலாம்.

1. அருகிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

2. எமது வாடிக்கையாளர் சேவை துரித அழைப்பு இலக்கமான **011 - 4 711 711** ஊடாக அல்லது **info@mbslbank.com / customercare@mbslbank.com** ஆகிய மின்னஞ்சல் முகவரி ஊடாக முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்.

3. தபால் மூலம் உங்கள் முறைப்பாடுகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தர் (பதில்கடமை),**
மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஸ்ரீலங்கா என்ட் ்.பைனான்ஸ் பீஎல்சீ
இல.28, இலங்கை வங்கி மேர்சன்ட் டவர்
புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.